# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No :Mc No.26/2023**

**Prosecution witness : எ.ம.சா.1** **Date : 18.08.2025.**

| Name : ராசு (எ) மோகன்ராஜ் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) மனுதாரர் எனது தாயார் என்றால் சரிதான். எனது அப்பா எந்த ஆண்டு இறந்தார் என்றால் 1994ம் ஆண்டு இறந்தார். எனது தகப்பனார் மின்சார வாரியத்தில் வேலை செய்த போது இறந்து விட்டார் என்றும், எனக்கு வேலை எனது தாயார் மற்றம் உடன் பிறந்தவர்கள் ஆட்சேபனை இல்லை என்பதால் கிடைத்தது என்றால் சரிதான்.எனது தாயார் எனது உடன் பிறந்த சகோதாரர்களை கூலி வேவலை செய்து காப்பாற்றினார் என்றால் விவசாய நிலம் இருந்ததது அதனை வைத்து காப்பாற்றினார். எனது அப்பாவிற்கு தொகை வந்ததது.

2. எனது தாயாருக்கு 70 ஆண்டு இருக்கும் என்றால் சரிதான். எனது தாயாருக்கு நோய் ஏதாவது உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இருதய நோய் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயருடன் எனது அண்ணன் மனநிலை சரியில்லாமல் உள்ளார் என்றால் நல்ல நிலைமையில் உள்ளார். கௌரி என்பத எனக்கு எனது தங்கை என்றால் சரிதான்.

3. கௌரி மேட்டுர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் எனது அம்மா மற்றும் எனது தங்கை சேர்ந்து நடத்துகிறார். அந்த வழக்கில் பதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். பதிலில் எனது தாயருக்கு பாகம் இல்லை என பதில் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். பதில் அடிப்படையில் இலவச சட்ட உதவி மையத்தில் முலமாக வழக்கறிஞர் வைத்து வாதாடு கிறார் என்றால் சரிதான்.

4. எனது தகப்பனார் இறந்ததற்கு எவ்வளவு தொகை வந்தது என்றால் எனது தாயாருக்கு தான் தெரியும். எனது அண்ணன் மீது கொலை வழக்கு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனக்கு வேலை வாங்குவதற்கும், கொலை வழக்கு நடத்துவதற்கும், உடல் நிலை சரி செய்வதற்கும் இழப்பீடு தொகை சரியாகிவிட்டது என்றால் பொய்யாகும். எனது தாயார் போன்டா பலகாரம் செய்து விற்பனை செய்து பிழைப்பு நடத்தி வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை. கௌரி காதல் திருமணம் செய்தாரா என்றால் 50 செண்ட் காடு விற்று திருமணம் செய்து வைத்தார்.

5. கௌரி காதல் திருமணம் செய்து வைத்ததால் எந்த சீர் வரிசையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. கௌரி அதன் காரணமாக தான் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வேலுசாமி கூலி வேலை செய்வாரா என்றால் ஆமாம். சிவில் வழக்கை நானும் வேலுசாமி சேர்ந்து நடத்துகிறாரா என்றால் ஆமாம். சிவில் வழக்கிற்கும் இந்த வழக்கிற்கும் ஒரே வழக்கறிஞர் என்றால் சரிதான். ஊர் பெரியவர்கள் முன்னிலையில் எனது தாயார் பொருளுதவி கேட்டாரா என்றால் இல்லை. எனது சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.46,000 ஆகும். இது நாள் வரை நான் வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான்.

6). எனது அலுவலகத்தில் என்ன பணியில் உள்ளேன் மின்பாதை ஆய்வாளராக உள்ளேன். (line inspector) எனக்கு சம்பளம் கொடுக்கும் அதிகாரி யார் என்றால் divisional engineer ஆகும். எனது பதிலில் வேலைக்கு செல்ல முடியாத நிலையில் உள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது இருதய சிகச்சை முலமாக காப்பிடு முலமாக சரிசெய்தேன் என்றால் இல்லை. காப்பீடு claim ஆகவில்லை.

7). எனது மாரடைப்பு மருத்துவ செலவிற்காக காப்பீடு தொகை வந்ததா என்றால் இல்லை. எனது காப்பீட்டில் எனது தாயாரும் உள்ளடக்கம் என்றால் இல்லை. மாதேஸ் என்பவருக்கு கொடுக்கபட்ட சொத்து எனது தாய் மாமா பழனிவேலுக்கு பாத்தியபட்டது என்றால் இல்லை. எனது தாயாருக்கு பாத்தியபட்டது ஆகும்.

பழனிவேல் இறந்து விட்டார். பழனிவேல் இறந்துவிட்டதால் எனது தாயார் பாகம் கிடைத்தால் கையொப்பம் செய்துள்ளார் என்றால் ஆமாம். வாரிசு அடிப்படையில் கையொப்பம் செய்தார். எனது மருத்துவ செலவு எவ்வளவு என்றால் ரூ. 12,000 ஆகும்.

8). மாதம் எனது பாரமரிப்பு செலவு எவ்வளவு என்றால் ரூ.10,000 ஆகும். குழந்தையின் பாரமரிப்பு செலவு எவ்வளவு என்றால் ரூ.12,000 ஆகும். ரூ.20 லட்சம் நிலத்தை விற்று பணம் வைத்துள்ளார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. பணத்தை ருக்குமணி,கௌரி ஆகியோருக்கு கொடுத்தாக சொல்வதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை.

9) பதவி உயர்வுக்கு தடையாக என்  அம்மா காரணமாக உள்ளதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 100 மனுக்கள் மேல் என் மீது தாக்கல் செய்துள்ளார். சிவில் வழக்கு நடத்த வேண்டாமென்று என் அம்மா சொல்லவில்லை என்றும் என் அம்மாவிற்கும், மனவளர்ச்சி குன்றிய அவரது மகனுக்கும் சொத்தில் பாத்தியம் உள்ளது என்று சொல்கிறார்கள் என்றும் அந்த பாகத்தை தான் அவர்கள் கேட்கிறார்கள் என்றும் சொன்னால் அவர்கள் பொய் சொல்கிறார்கள்.

10) நான் சொன்னவாறு என் அம்மாவிற்கு மாத பென்ஷன் ரூ.15,000/- வரவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரராகிய என் அம்மா கேட்டது போல், உணவு, உடை  மற்றும் மருத்துவ செலவிற்கு நான் கடமைப்பட்டவன் என்றால் மாதம் ரூ.3500/- கொடுத்து தான் வருகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2

மேட்டூர்.